**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக அதிகாரசபையின் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

நிதி நிலைமை கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று ஆகியவற்றில் என்னடக்கப்பட்ட பொருண்மையான விடயங்கள், மாற்று வழிகளில் என்னால் உறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ முடியாதிருந்தன. இந்த விடயங்களின் விளைவாக, பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத தொகைகள் மற்றும் நிதி நிலைமை கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று என்பவற்றை உருவாக்கும் கூறுகள் தொடர்பாக ஏதேனும் சீராக்கங்கள் அவசியமானதா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால்

அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமம் பொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கற்பனை சொத்துக்கள் நியம இல. 01 இன் பிரகாரம் நிதி நிலைமைக்கூற்றில் முகப்பில் ஒரு வரி உருப்படியாகக் காட்டப்பட வேண்டிய போதிலும் ரூபா 14,738,987 பெறுமதியான கணனி மென்பொருள் நிதிக்கூற்றுக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியின் கீழ் காட்டப்பட்டிருந்தது. நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஒன்றையொன்று ஈடுசெய்யக் கூடாத போதிலும் காசு மீதிக்கு எதிராக ரூபா 36,672,767 வங்கி மேலதிகப்பற்று எதிரீடு செய்யப்பட்டு தேறிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஐயவினாவுடன் இணங்கப்படுகின்றதுடன் எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியம இல. 01 இன் பிரகாரம் கற்பனை சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் முகப்பில் ஒரு வரி உருப்படியாகக் காட்டப்பட வேண்டியதுடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்படக் கூடாது. |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அதிகாரசபையால் தொடரப்பட்ட 6 சட்ட வழக்குகளும், அதிகாரசபைக்கு எதிராக தொடரப்பட்ட 18 சட்ட வழக்குகளும் காணப்பட்டன. எவ்வாறாயினும், நிகழத்தக்க பொறுப்பின் தன்மை தொடர்பான சுருக்கமான விபரம், அது நடைமுறைக்குரியதாக இருந்தால், அதன் நிதி தாக்கத்தின் மதிப்பீடு, கொடுப்பனவு காலம் மற்றும் திருப்பிச் செலுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆகியவை நியம இல. 08 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்கப்படுகின்றதுடன் நிதிப் பிரிவுக்கு சட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் கிடைக்காததால் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட முடியாதிருந்தன. எனினும், சட்டப் பிரிவிடமிருந்து தேவையான தகவல்களைப் பெற்ற பின்னர் எதிர்காலத்தில் கணக்குகளை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியம இல. 08 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 214,594,528 தொகையான அபிவிருத்தி ஆதனங்களின் கொண்டுசெல்லும் பெறுமதி கற்பனை சொத்துக்களாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | அபிவிருத்தி ஆதனங்களின் கொண்டுசெல்லும் பெறுமதி தனித்தனியாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) 1732 ஏக்கர் பரப்பளவிலான காணி தெட்டுவ சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 173,159,909 செலுத்தி வழங்கப்பட்டுள்ள போதிலும் 2021 ஒக்தோபர் 30 வரையிலும் அங்கு சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டளவில் பிரதேச செயலகத்தினால் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த காணிகளை அதிகாரசபையின் சொத்துகளாக கணக்குகளில் | 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது புத்தகங்களில் பதிவு செய்வதற்காக காணிகளின் பெறுமதிகள் பற்றிய உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் நிதிப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. எனினும், எதிர்காலத்தில் தேவையானவற்றை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுவீகரிக்கப்பட்ட காணிகள் கணக்குப் புத்தகங்களில் சொத்துகளாகப் பதிவு செய்யப்பட்டு காணிகளிற்கான பதிவேடு பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அதிகாரசபை உரிமையாக்கல், சுவீகரித்தல் அல்லது அரசாங்க மானியம் மூலம் உரிமைத்துவத்தை பெற்றுக்கொண்ட அனைத்துக் காணிகளுக்கும் பதிவேட்டை பேணியிருக்கவில்லை எனினும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அதிகாரசபைக்கு சொந்தமான காணிகள் ரூபா 1,618 மில்லியன் தொகையாக காணப்பட்டது. | | |
| (இ) | சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாகாண சபைகளாலும் நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 22,516,037 தொகையானது ஏற்பட்ட ஆண்டின் செலவினமாக இனங்காணப்படுவதற்குப் பதிலாக கணக்குப் புத்தகங்களில் நடைமுறை வேலையாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வேலை பூர்த்தியாக்கல் விபரங்கள், கொடுப்பனவுகளுக்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது தொடர்புடைய பிரிவுகளால் நிதிப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அத் தகவல்களைப் பெற்ற பின்னர் தேவையான அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு இணங்கப்பட்டுள்ளது. | அதிகாரசபை உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்ளாததால் அது ஏற்பட்ட ஆண்டின் செலவினங்களாக இனங்காணப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| **(அ)** | **பெறவேண்டிய கணக்குகள்** | | | | | |
| (i) | இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் | 108,336,568 | 0 | 108,336,568 | இம் மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ii) | இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | 8,782,635 | 108,336,570 | 99,533,935 | இம் மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| (iii) | இலங்கை மாநாட்டு பணியகம் | 263,223 | 0 | 263,223 | இம் மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| (iv) | சுற்றுலா அபிவிருத்தி நிதியம் | 3,975,260 | 4,675,168 | 699,908 | இம் மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| **(ஆ)** | **செலுத்த வேண்டிய கணக்குகள்** | | | | | |
| (i) | இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்தவ நிறுவகம் | 6,512,810 | 0 | 6,512,810 | இம் மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | சுற்றுலா அபிவிருத்தி நிதியம் | 703,607 | 470,864 | 232,743 | இம் மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | காணிகள் | 1,803,501,357 | 1,803,072,529 | 428,828 | எப்படி இணக்கம் செய்யப்பட்டது என்பது பற்றிய விளக்கத்தை தயவு செய்து சமர்ப்பிக்கவும். | காணிகளாகக் கணக்கீடு செய்யப்பட்ட தொகை பட்டியல்களுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஈ) | வியாபார கடன்பட்டோர் | 210,359,144 | 209,988,954 | 370,190 | ஐயவினாவுடன் இணங்கப்படுகின்றதுடன் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணக்கீடு செய்யப்பட்ட தொகை பட்டில்களுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (உ) | ஏனைய வருமானம் | 1,369,492 | 1,101,349 | 268,143 | ஐயவினாவுடன் இணங்கப்படுகின்றதுடன் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |

**1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கிடைக்கக்கூடிய விடயம் | | தொகை ரூபா (மில்லியன்) | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நடைமுறை வேலை | 120.8 | – செலவின விலைப்பட்டியல்<br>– மூல ஆவணங்கள் | இந்த தகவலை உள்நாட்டு சுற்றுலா (DT & CR) பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். | தேவையான ஆவணங்கள் மற்றும் கோவைகள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | அபிவிருத்தி கிரயம் | 214.5 | – மூல ஆவணங்கள்<br>– விபரமான பட்டியல்கள் | பதில் வழங்கப்படவில்லை. | மூல ஆவணங்கள் மற்றும் விபரமான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | முதலீடு | 54.6 | – முதலீட்டுச் சான்றிதழ்கள் | கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்காக சபையிடமிருந்தான அங்கீகாரத்தின் அடிப்படையில் இம் மீதிகள் அங்கீகாரத்திற்காக திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளன | மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஈ) | கல்பிட்டி மூலதனம் | 46.4 | – | சொத்துக்களின் விபரங்கள் | பதில் வழங்கப்படவில்லை. | தகவலின் விபரங்கள் வழங்கப்பட வேண்டும். |
| (உ) | மூலதன ஒதுக்கம் | (243.7) | – | விபரமான பட்டியல்கள் | கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்காக சபையிடமிருந்தான அங்கீகாரத்தின் அடிப்படையில் இம் மீதிகள் அங்கீகாரத்திற்காக திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. | விபரமான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 210,359,144 தொகையாக காணப்பட்டது. அதில், ரூபா 54,918,514 தொகையான கடன்பட்டோர் மீதி 4 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ளதுடன் 3 முதல் 4 ஆண்டுகள் வரையிலான கடன்பட்டோர் மீதி ரூபா 24,976,435 தொகையாக காணப்பட்டது. எனினும், இக் கடன்களை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஐயவினாவுடன் இணங்கப்படுகின்றதுடன் விடுதி (Resort) முகாமைத்துவ பிரிவுடன் கலந்துரையாடிய பின்னர் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவையாக உள்ள கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1989 முதல் 2007 வரை வெளிநாட்டில் அலுவலக வாடகைக்காக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 3,661,031 தொகையான பெறவேண்டிய வைப்பை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இம் மீதிகளிற்கு எழுத்துமூலமான சான்றுகள் கிடைக்காததால் சபை அங்கீகாரத்திற்கு உட்பட்டு கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதி அமைச்சின் அங்கீகாரத்துடன் கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 11 ஆண்டுகளாக நிலுவையாக உள்ள ரூபா 333,694 வெளிநாட்டு முற்பண மீதி மீளாய்வாண்டின் இறுதியில் வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | முற்பண மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) பாசிக்குடாவில் உள்ள தேசிய விடுமுறை விடுதி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள சாக்கடை மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறிக்கு சொந்தமான 14 ஹோட்டல்களில் இருந்து ரூபா 246,730,325 தொகை அறவிடப்படப்பட்டு குறித்த கம்பனிக்கு செலுத்த வேண்டியிருந்தது. இத் தொகை 2013 முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை நிலுவையாக காணப்பட்டதுடன் தொடர்புடைய கம்பனிக்காக கட்டணத்தை அறவீடு செய்து பின்னர் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எம். எஸ். லக்தியத பிறைவேட் கம்பனியுடன் இணங்கப்பட்டவாறு சாக்கடை மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறியின் அலகு கிரயம் கணிசமானளவு அதிகமாக உள்ளது, எனவே, தேசிய விடுமுறை விடுதியான பாசிக்குடாவின் ஹோட்டல் உரிமையாளர்கள் மாதாந்த விலைப்பட்டியல்களை செலுத்துவதற்கு தயாராக இல்லை என்று தொடர்ந்து முறைப்பாடு செய்திருந்தனர். எனவே, பல கலந்துரையாடல்களுக்குப் பின்னர் சாக்கடை மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறிக்கான எதிர்கால பரிந்துரைகளுடன் தொழில்நுட்ப மற்றும் நிதி சாத்தியக்கூறுகளை மதிப்பீடு செய்வதற்கு ஆலோசனையாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு அதிகாரசபை தீர்மானித்திருந்தது. தேசிய போட்டி கேள்விகளை கோருவதன் மூலம் ஆலோசனை கம்பனி தெரிவு செய்யப்பட்டு இது வழங்கப்பட்டுள்ளது. ஆலோசனையாளரால் அனைத்து தரப்பினருடனும் நடாத்தப்பட்ட பல கலந்துரையாடல்களுடன் சூழ்நிலை பகுப்பாய்வு, | செலுத்த வேண்டியவைகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

தொழில்நுட்ப மற்றும் நிதி மதிப்பீடு ஆகியவற்றை நடாத்தி வரைவு அறிக்கை அதன் இறுதி கட்டத்தில் உள்ளது. மேலும் அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னரே எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும். சபையின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்படும். கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாடு எப்போதாவது பூட்டப்பட்டது. எனவே, இச் செயன்முறை தாமதமாகியிருந்தது.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டம் | | | |
| (i) | சட்டத்தின் 6.1 (அ) (ஆ). பிரிவு | சுற்றுலா அபிவிருத்திக்காக முன்மொழியப்பட்ட நீண்டகால இலக்குகள் மற்றும் நான்காண்டு திட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017-2020 இற்கு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட மூலோபாய திட்டம் 2020 இற்கும் நீடிக்கப்பட்டுள்ளது. | சுற்றுலா அபிவிருத்திக்கான நீண்ட கால இலக்குகள் மற்றும் நான்கு ஆண்டு திட்டம் என்பன தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | சட்டத்தின் 26(3) ஆம் பிரிவு | பிரகடனப்படுத்தப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி வலயத்திற்குள் மேற்கொள்ளப்படக்கூடிய சுற்றுலா நடவடிக்கைகள், வர்த்தக மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான பிரமாணங்கள் | பிரகடனப்படுத்தப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி வலயத்திற்குள் மேற்கொள்ளப்படக்கூடிய சுற்றுலா நடவடிக்கைகள், வர்த்தகம் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் ஆரம்பத் திட்டத்தின் | சட்டத்தின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் பிரமாணங்கள் உருவாக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உருவாக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஒக்தோபர் 30 வரையிலும் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட 11 சுற்றுலா அபிவிருத்தி வலயங்களுக்கு அத்தகைய பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அவ்வாறு அமுல்ப்படுத்தப்படுகின்ற சுற்றுலா அபிவிருத்து பகுதி செயற்திட்டங்கள் பல உள்ளதுடன் ஒரு குறிப்பிட்ட பகுதி இங்கு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் | மீளாய்வாண்டின் போது குறுங்கால முதலீடுகளில் ரூபா 1 பில்லியன் தொகையை வைப்பிலிடுவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் நிதி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | முதலீடுகளில் பணத்தை வைப்புச் செய்வதற்கு தேவையான அங்கீகாரங்கள் பெறப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணங்கள். | | | |
| (i) | நிதி பிரமாணம் 396 | கால அளவு இனங்காணப்படாத ரூபா 3,441,809 தொகையான கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகளுக்காக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகளிற்காக சமர்ப்பிக்கப்படாத இக் காசோலைகளின் பட்டியல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதி பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவுகளிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதி பிரமாணம் 757 | ரூபா 1,880,781 பெறுமதியான நூலக புத்தகங்கள் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்களின் பிரகாரம் இந் நூலக புத்தகங்களின் உரிமைத்துவமானது அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்ட போதிலும் இந்த புத்தகங்களின் பௌதீக பயன்பாடு இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திடம் உள்ளது. எனவே, அவர்களுக்கு உரிமைத்துவத்தை | நூலக புத்தகங்களுக்கான பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மாற்றுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. | |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துகள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | கணனி மயப்படுத்திய படிவத்தில் (MS-EXCELL) தயாரிக்கப்பட்டு அதிகாரசபையால் பேணப்படும் நிலையான சொத்துக்கள் பதிவேடு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அதைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு சுற்றறிக்கையின் வழிகாட்டுதலின் பிரகாரம் 3ாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 120,150,798 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 119,458,429 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 239,609,227 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி ரூபா 223,970,698 ஆல் குறைவடைந்தமை மற்றும் குடியகல்வு வரி ரூபா 54,465,786 ஆல் குறைவடைந்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன் சாத்தியவள ஆய்வின்றி 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கலிடோ கடற்கரை பூங்கா செயற்திட்டத்திற்குரிய நிறைவேற்றப்பட்ட பணிகளின் தொகை அதுவரை அழிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டு வரை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 19,990,021 முற்பணம் மற்றும் ரூபா 1,247,206 நடைமுறை வேலை செலவினங்கள் ஆக ரூபா 21,237,227 கூட்டுமொத்தம் நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் | 2021-02-09 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் சுற்றுலாத்துறை தகவல் நிலையத்தின் மூலதனச் செலவினங்களுக்கான மொத்தச் செலவினங்களை ஈடுசெய்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி செலவினங்கள் தொடர்ந்து மீதியாக இருந்தது. கடந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட | தேவையான அங்கீகாரங்களை பெற்ற பின்னர் கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | தீர்மானத்தின் பிரகாரம் பணிப்பாளர்/ மனித வளங்கள் உள்ளடங்கிய குழுவின் பரிந்துரைகள் மூலம் மேற்படி கிரயம் சபைக்கு அனுப்பப்படும் என குறிப்பட்டுள்ளது. தற்போது நிலவும் தொற்றுநோய் காரணமாக, இந்த அவதானிப்பு அறிக்கையை சமர்ப்பிப்பது தாமதமாகியிருந்தது. எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இக் கிரயம் கவனத்தில் கொள்ளப்படும். | |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ------------------------------------------------ | ----------------------------------------- | --------------------- |
| (அ) துன்ஹிந்த நீர்வீழ்ச்சி வீதியுடன் சேர்த்து 20 விற்பனை நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2017 பெப்ரவரியில் தொடங்கப்பட்ட செயற்திட்டம் தொடர்பாக 2021 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 2,864,289 கூட்டுமொத்தமான கிரயத்தில் 10 விற்பனை நிலையங்கள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை மீளப் பெற்றுக் கொள்வதன் அடிப்படையில் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பிரதேச சபையின் பணப்பற்றாக்குறை காரணமாக நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. | – துன்ஹிந்த நீர்வீழ்ச்சி வீதியுடன் சேர்த்து 20 விற்பனை நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டு சபைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. நிறைவேற்றும் நிறுவனம் சொரனதோட்டை பிரதேச சபையாகும்.<br>– நிர்மாண ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டால் கிரயம் அதிகம் என்பதால் பிரதேச சபையின் நேரடித் தலையீட்டின் மூலம் இச் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது.<br>– அதற்கிணங்க மீளளிப்பு அடிப்படையில் நிர்மாணங்களிற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>– 2018.07.11 இல் பணப்பற்றாக்குறை காரணமாக மூலப்பொருட்களிற்கான | செயற்திட்டம் தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலவினங்கள் மற்றும் நிர்மாணக் கிரயத்தை மேற்கொள்ள முடியாதிருந்தமை பிரதேச சபையினால் அறிவிக்கப்பட்டது.<br>– எனவே, தொடர்புடைய செயற்திட்டம் 2021.03.23 வரை தாமதமாகியிருந்தது. | |
| (ஆ) | மதுரங்குளியவில் சுற்றுலா வசதி நிலையத்தை (ஆறுதல் நிலையம்) நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு வரையில் அதிகாரசபையினால் ரூபா 6,771,807 தொகை வடமேல் மாகாண சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களிற்காக அதிகாரசபையினால் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. பின்னர் அவ் விலைப்பட்டியல்கள் தவறானவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக, செயற்திட்டம் 2020 திசெம்பர் 31 இல் நிறுத்தப்பட்டது. | – ரூபா 15 மில்லியன் தொகைக்காக ஆரம்ப இணக்கப்பாட்டுடன் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் இச் செயற்திட்டம் 2015 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் நாளதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்ட மொத்தப் பணம் ரூபா 6.7 மில்லியன் தொகையாக காணப்பட்டது.<br>– எனவே பொறியியலாளர்களால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல்கள் மற்றும் அளவீட்டுப் பட்டியல்களில் பிழைகள் காணப்பட்டன, பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.<br>– செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளைத் தவிர, முன் அங்கீகாரங்கள் இன்றி பிரதான திட்டத்திலிருந்து விலகி நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கண்டறிந்துள்ளனர்.<br>– தெளிவுபடுத்தல்களிற்காக அனுமதிக்கப்பட்ட கோரிக்கைக்கு பிரதேச சபை பதிலளித்திருக்கவில்லை எனவே, அமைச்சின் உதவியை கோரியுள்ளோம். | செயற்திட்டம் தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் அதிகாரசபைக்கு சொந்தமான 04 தேசிய விடுமுறை விடுதிகளின் மொத்த நட்டம் ரூபா 27,003,697 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான மொத்த நட்டம் ரூபா 46,016,794 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது மொத்த நட்டம் 70 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் 26 அபிவிருத்திச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 11 செயற்பாடுகள் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டிருந்தன, அவற்றில் 8 செயற்பாடுகளில் மாத்திரமே பௌதீக முன்னேற்றம் 75 வீதத்தை விட அதிகமாக காணப்பட்டது. | • பெறுகை நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் தாமதமாகியிருந்தன.<br>• பதிலளிக்காத கேள்விதாரர்களின் விலைமனுக்கள் காரணமாக மிள்கேள்வி கோரப்பட்டது.<br>• கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாடு எப்போதாவது மூடப்பட்டது.<br><br>மட்டுப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி குறைப்பு காரணமாக தேவையில்லாத பணிகளின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமைத்துவ தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. | தேசிய விடுமுறை விடுதிகள் இலாபம் ஈட்டும் பொருட்டு வழிப்படுத்தப்பட வேண்டியதுடன் திட்டமிட்டவாறு அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 தீவுகளுக்குச் சொந்தமான 2055.87 ஏக்கர் பரப்பளவிலான காணி 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அதிகாரசபைக்கு மானியங்களாகப் பெறப்பட்டிருந்தது. 12 தீவுகளில், 05 தீவுகளுக்கு சொந்தமான 206.74 ஏக்கர் பரப்பளவிலான காணி மாத்திரமே 03 கம்பனிகளுக்கு 2010, 2011 மற்றும் 2020 ஆண்டுகளில் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. எனினும், இக்கம்பனிகள் எதுவும் 2021 ஒக்தோபர் 30 வரையிலும் செயற்பாடுகளை தொடங்கியிருக்கவில்லை.<br>மீதமுள்ள 07 தீவுகள் தொடர்பான 1849.13 ஏக்கர் பரப்பளவிலான | 12 தீவுகளில், 05 தீவுகள் 2021 ஒக்தோபர் 30 இல் உள்ளவாறு குத்தகைக்கு விடப்பட்டிருந்தன, மேலும் 03 தீவுகளை குத்தகைக்கு வழங்குவதற்கு அங்கீகாரங்கள் பெறப்பட்டிருந்தன. | மானியமாக பெறப்பட்ட காணிகள் சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணி மானியமாகப் பெறப்பட்ட திகதியிலிருந்து 2021 ஒக்தோபர் 30 வரை சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | யால, பலதுபான சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் 1975 ஆம் ஆண்டு முதல் 1,106 ஏக்கர் பரப்பளவிலான காணி அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்டதுடன் 69 ஏக்கர் 2014 இல் 7 கம்பனிகளுக்கும் 2019 இல் வேறொரு கம்பனிக்கும் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. எனினும், 04 கம்பனிகள் மாத்திரமே 2021 அக்டோபர் 30 வரையிலும் செயற்பாடுகளை தொடங்கியிருந்தன. | தற்போது 02 கம்பனிகளால் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 02 கம்பனிகளினால் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு கம்பனியின் காலப்பகுதி நீடிக்கப்பட்டுள்ளது. 2020.09.30 இல் மற்றொரு முதலீட்டாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. | குத்தகைக்கு விடப்பட்ட கம்பனிகளின் செயற்பாடுகளைத் தொடங்குவதற்கு அவற்றை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | குச்சவெளி சுற்றுலாத்துறை அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபையால் சுவீகரிக்கப்பட்ட 510.086 ஏக்கர் பரப்பளவிலான காணியில் 49 ஏக்கர் மாத்திரமே 3 கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. அந்த 3 கம்பனிகளில், ஒரு கம்பனி 2021 மே மாதத்தில் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருந்தது. 20 ஏக்கர் குத்தகைக்கு 2011 இல் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருந்த இன்னொரு கம்பனி 2021 ஒக்தோபர் 30 வரையிலும் நிர்மாணங்களை ஆரம்பித்திருக்ககவில்லை. அதற்கிணங்க குச்சவெளி செயற்திட்டத்திற்கு சொந்தமான 461.086 ஏக்கர் பரப்பளவிலான காணி 2021 ஒக்தோபர் 30 வரையிலும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு விடப்பட்டிருக்கவில்லை. | 04 முதலீட்டாளர்களால் புதிய செயற்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு 137 ஏக்கர் யானை பாதுகாப்பு வலயத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. | சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அதிகாரசபைக்கு சொந்தமான 37 விருந்தினர் இல்லங்களில், 09 விருந்தினர் இல்லங்கள் 5 மாதங்கள் முதல் 52 மாதங்கள் வரை வாடகைக்கு விடப்பட்டிருக்கவில்லை, எனவே, அந்த ஆதனங்கள் குறைவாகவே பயன்படுத்தப்பட்டன. | வருங்கால கேள்விதாரர்களை தெரிவு செய்வதற்கு பல முறை கேள்விகள் கோரப்பட்ட போதிலும் பதிலளிக்காத கேள்விகள் பெறப்பட்டது. ஆக்கிரமிப்புகள் காரணமாக காணி விவகாரங்கள் எழுந்தன. | விருந்தினர் இல்லங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |